## இலங்கை மகாவலி அதிகாரசபை மற்றும் அதன் துணைக்கம்பனிகள் - 2013

இலங்கை மகாவலி அதிகாரசபையினதும் அதன் துணைக்கம்பனிகளினதும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்து பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. துணைக்கம்பனிகளினது நிதிக்கூற்றுக்கள் உரிய துணைக்கம்பனிகளால் நியமிக்கப்பட்ட பொது சேவையிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனத்தால் கணக்காய்வு செய்யப்பட்டன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கிண்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிக்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டை மேற்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக்கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளில் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

1.4 **முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம் - தொகுதி**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து இலங்கை மகாவலி அதிகாரசபையினதும் அதன் துணைக்கம்பனிகளினதும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**முனைப்பழியுள்ள அபிப்பிராயம் - அதிகாரசபை**

இந்த அறிக்கையின் 2.2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, இலங்கை மகாவலி அதிகாரசபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 தொகுதி நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள்**

அதிகாரசபையினதும் அதன் ஐந்து துணைக்கம்பனிகளினதும் நிதிக்கூற்றுக்கள் ஒன்றிணைக்கப்பட்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. எனினும் இந்த நோக்கத்திற்காக மூன்று துணைக்கம்பனிகள் மாத்திரமே அவர்களுடைய கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்திருந்தன. அந்த துணைக்கம்பனிகளினது பெயர்கள் மற்றும் உரிமை பின்வருமாறு உள்ளன.

| துணைக் கம்பனியின் பெயர் | உரிமையின் சதவீதம் |
|---|---|
| வரையறுக்கப்பட்ட மகாவலி ஆலோசனை பணியகம் (தனியார்) கம்பனி | 100 |
| வரையறுக்கப்பட்ட இயற்கை வளங்கள் முகாமைத்துவ சேவைகள் (தனியார்) கம்பனி | 100 |
| வரையறுக்கப்பட்ட மகாவலி பொறியியல் சேவைகள் (தனியார்) கம்பனி | 100 |
| வரையறுக்கப்பட்ட மகாவலி இணைப்பு மூலதன (தனியார்) கம்பனி | 100 |
| வரையறுக்கப்பட்ட மகாவலி கால்நடை வளர்ப்பு மற்றும் விவசாய தொழில் முயற்சிகள் (தனியார்) கம்பனி | 100 |

### 2.2.2 அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

18 பண்ணைகள் மற்றும் இரண்டு பட்டறைகளினதும் வருமான மற்றும் செலவின கணக்குகளை தயாரிப்பதற்கு பிரயோகித்த கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வு தெரிவுச்செவ்வையின் போது, ரூபா 59,572,775 தொகையான மூலதனச் செலவினம் மீண்டுவரும் செலவினமாக கணக்கிடப்பட்டிருந்தன. ஆகவே, மீளாய்வாண்டிற்கான நடைமுறையல்லாச் சொத்துக்களானது குறைத்துக் காட்டப்பட்டிருந்த அதே வேளையில் அதே தொகையினால் ஆண்டிற்கான பற்றாக்குறை அதிகரித்திருந்தது. மேலும் மீளாய்வாண்டின் போது இச்சொத்துக்களிற்கான பெறுமானத்தேய்வு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

கணக்காயவிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வியாபார மற்றும் ஏனைய வருமதிகளின் மீதி ரூபா 1,001.8 மில்லியனாகவும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 893.4 மில்லியனாகவும் இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வியாபார மற்றும் ஏனைய வருமதிகளின் அதிகரிப்பானது ரூபா 108.4 மில்லியன் அல்லது 12 சதவீதமாகும். இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பெறவேண்டியவற்றில் ரூபா 455,958,976 அல்லது 93 சதவீதம் கிடைக்க வேண்டிய வாடகை வருமானமானதுடன், அந்த வாடகை வருமானத்தில் ரூபா 124,041,067 , ரூபா 116,200,208 , ரூபா 110,694,725 என்பன முறையே ''சீ'' வலயம், விக்ரோரியா-கொத்மலே மற்றும் ''எச்'' வலயத்திலிருந்து அறவிடப்பட வேண்டியவையாகவிருந்தது.

(ஆ) கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட காலப் பகுப்பாய்வின் பிரகாரம், குடியிருப்பாளர்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 137,995,000 மற்றும் ரூபா 53,850,000 தொகைகள் முறையே ஐந்து வருடங்களுக்கு மேலாகவும் மற்றும் மூன்று தொடக்கம் ஐந்து வருடங்களுக்கும் நிலுவைகளாக இருந்தனவென வெளிப்படுத்தப்பட்டிருந்தன. அதிகாரசபையால் இந்த மீதிகளை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரை உடனடவடிக்கை எடுக்கப்ட்டிருக்கவில்லை.

(இ) ஐந்து வருடங்களுக்கு மேலாகவும் மற்றும் மூன்று தொடக்கம் ஐந்து வருடங்களுக்கும் இடையில் கணக்குகளில் இருந்த ரூபா 344,272 மற்றும் ரூபா 779,407 தொகையான ஆரம்ப முற்பணங்களை அறவிடுவதற்கு 2014 திசெம்பர் 31 வரை எந்தவொரு நடவடிக்கைகளும் எடுக்கப்ட்டிருக்கவில்லை.

(ஈ) மகாவலி ஒன்றிணைந்த செயற்பாட்டு முறைமை ''ஜீ'' மற்றும் மகாவலி மீள்நிர்மாண மற்றும் புனரமைப்பு செயற்திட்டம் 2005 இல் முடிவடைந்திருந்த போதிலும் முறையே ரூபா 2,700,000 மற்றும் ரூபா 4,200,000 கூட்டு மொத்தத் தொகையான அறவிடாமல் நிலுவையாகவுள்ள ஆரம்ப முற்பணங்கள் அதிகார சபையால் 2013 திசெம்பர் 31 வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(உ) 2014 சனவரி 29 மற்றும் 2014 சனவரி 31 ஆம் திகதிய ஏசீசீரீஎஸ்/சீஓர்ஆர்பி/டிஆர்எஸ்/2014 ஆம் இலக்க ஒரேமாதிரியான கடிதத்தின் பிரகாரம், சட்டமா அதிபர் நாயக திணைக்களத்திற்கு சட்டக்கட்டணமாக ரூபா

14,152,690 செலுத்த வேண்டியிருந்தது. இருந்தபோதிலும் இது தொடர்பில் அதிகாரசபையால் அட்டுறு செலவாக ரூபா 4,135,000 தொகை மட்டுமே செலுத்தப்பட்டிருந்தது.

**2.2.2.4 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்**

---

பின்வரும் வித்தியாசங்களுக்கான காரணங்கள் கணக்காய்விற்காக விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் தொகை | உரிய பட்டியல் / பேரேட்டு கணக்குகளின் படி தொகை | வேறுபாடுகள் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| 1. பத்து வதிவிட முகாமையாளர் அலுவலகத்தில் வாடகை வருமானம் | 247,148,000 | 166,910,000 | 80,238,000 |
| 2. பண்ணை வருமானம் | | | |
| ஆர்பீளம் - வீ | 858,000 | 10,370,000 | 9,412,000 |
| ஆர்பீளம் - வாலவா | - | 8,778,000 | 8,788,000 |
| 3. மீள்மதிப்பீட்டு மிகை | 793,820,000 | 884,118,000 | 90,298,000 |

**2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

---

கீழே காட்டப்பட்ட பின்வரும் ஓவ்வொரு விடயங்களிற்கு எதிராக குறிப்பிடப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்குகளின் விடயங்கள் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா.மில்லியன் | |
| வங்கி மீதிகள் | 122.84 | வங்கி உறுதிப்படுத்தல்கள் |
| பண்ணை உற்பத்திப் பொருட்கள் விற்பனைகள் | 19.88 | விரிவான பட்டியல்கள் |
| பெறவேண்டிய வாடகை | 380.35 | தரவு அடிப்படை அல்லது முறையாக பேணப்பட்ட பதிவேடுகள் |
| | 523.07 | |

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

கணக்காய்வில் பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ)இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i)நிதிப்பிரமாணம் 104(1)(ஆ) | பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரால் நியமிக்கப்பட்ட குழுவால் இரண்டு முக்கிய வாகன விபத்துக்கள் தொடர்பான ஆரம்ப விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்த விபத்துக்களால் ஏற்பட்ட மொத்த சேதங்கள் ரூபா 1,330,795 ஆனதுடன் இதில் ரூபா 537,250 தொகை மாத்திரமே காப்புறுதி கம்பனியிடமிருந்து அறவிடப்பட்டிருந்தது. |
| (ii)நிதிப்பிரமாணம் 110(1) | நட்டங்கள் மற்றும் சேதங்களை பதிவதற்கான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ)இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | |
| அத்தியாயம் VII இன் 12.5.1 ஆம் பிரிவு | அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் ஊடக இரண்டாம் நிலை அடிப்படையில் உத்தியோகத்தர் பதவி இல்லாத போதிலும் அரச தகவல் திணைக்களத்தின் உத்தியோகத்தர் ஒருவர் அப்பதவிக்கு சேர்க்கப்பட்டிருந்தார். பின்னர், 2011 சனவரியிலிருந்து முழுநேர அடிப்படையில நீர்ப்பாசன மற்றும் நீர்வளங்கள் முகாமைத்துவ அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தார். எவ்வாறாயினும், தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாக அதிகாரசபையால் 2011 சனவரி தொடக்கம் 2013 செப்தெம்பர் வரையான காலப்பகுதிக்கு மாதாந்தம் ரூபா 50,000 தொகையினை சம்பளமாகவும் ரூபா 480,095 எரிபொருள் படியாகவும் செலுத்தப்பட்டிருந்தது. |

**03. நிதி மீளாய்வு**

**3.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின்போது அதிகாரசபையினதும் அதன் துணைக் கம்பனிகளினதும் செயற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான அரசாங்கத்தின் மானியமான ரூபா 2961.43 மில்லியனை கணக்கிலெடுத்துக்கொள்வதற்கு முன்னரான அவ்வாண்டிற்கான நேரொத்த பற்றாக்குறையான ரூபா 3,318,27 மில்லியனுடன் ஒப்பிடும்போது அரசாங்க மானியமான ரூபா 3,471.66 மில்லியனை கணக்கிற்கு எடுத்துக்கொண்ட பின்னர் ரூபா 3,542.25 மில்லியன் பற்றாக்குறையை விளைவித்திருந்தது. ஆகையால் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 286.258 மில்லியன் முன்னேற்றத்தினைச் வெளிக்காட்டுகின்றது. வாகனங்களின் மீள்மதிப்பீட்டால் வாகனங்களிற்கான பெறுமானத்தேய்வு மீளாய்வாண்டின் போது செய்யப்படாமையே இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 துணைக்கம்பனிகளை கலைத்தல்

அதிகாரசபையின் துணைக் கம்பனிகளாகவிருந்த வரையறுக்கப்பட்ட மகாவலி இணைப்பு மூலதன (தனியார்) கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட மகாவலி பொறியியல் சேவைகள் (தனியார்) கம்பனி ஆகிய கம்பனிகளை கலைப்பதற்காக 2013 நவம்பர் 23 ஆந் திகதி பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இதற்கிணங்க, மகாவலி பொறியியல் சேவைகள் (தனியார்) கம்பனியானது கலைக்கப்பட்டிருந்த அதேநேரம், மகாவலி இணைப்பு மூலதன வரையறுக்கப்பட்ட (தனியார்) கம்பனியின் நடவடிக்கைகளை முடிவுறுத்துவதை அமுல்படுத்தப்படுகின்றது.

#### 4.1.2 காணி அபிவிருத்தி நடவடிக்கைகள்

அதிகாரசபையின் பிரதான திட்டத்தின் பிரகாரம், 14 வலயங்களுக்குள் அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட மொத்த காணியின் பரப்பளவு 420,170 ஹெக்டேயர்களாகும். எவ்வாறாயினும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள காணியின் அளவு 102,528 ஹெக்டேயர்களாக இருந்ததுடன் மொறகஹகந்த செயற்திட்டம், தெற்கு மாதுறு ஓயா மற்றும் கியூல் ஓயா செயற்திட்டத்தின் கீழ் தற்பொழுது அபிவிருத்தி செய்யப்பட்டுவருகின்ற காணிகளின் அளவு 109,715 ஹெக்டேயர்களாகும். இதற்கிணங்க, 207,927 ஹெக்டேயர் காணிகளை அபிவிருத்தி செய்வதற்காக இன்னும் உறுதியான அபிவிருத்தி வேலைத்திட்டம் ஒன்று 2013 திசெம்பர் 31 வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 4.1.3 சுற்றுலா விடுதியின் கட்டுப்பாடு மற்றும் பேணுகை

2013 திசெம்பர் 31 இல் அதிகாரசபையின் கீழ் 17 சுற்றுலா விடுதிகள் இருந்தன. நுவரெலியாவிலுள்ள சுற்றுலா விடுதியானது 2011 யூனிலிருந்து புதுப்பித்தலுக்காக மூடப்பட்டிருந்த போதிலும் புதுப்பித்தல் நடவடிக்கைகள் 2013 திசெம்பர் 31 வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2013 ஆம் ஆண்டிற்கான ஒன்றிணைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், சுற்றுலா விடுதிகளிடமிருந்து பெறப்பட்ட மொத்த வருமானமானது ரூபா 5,281 மில்லியன் ஆக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின்போது சுற்றுலா விடுதிகளின் பராமரிப்பு மற்றும் கட்டுப்பாடு தொடர்பாக போதிய கவனம் செலுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 4.2 முகாமைத்துவ வினைத்திறமையீன்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) டிகனாவிலுள்ள பாதுகாப்பு உத்தியோகத்தரால் 2013 சனவரியிலிருந்து யூலை வரையான காலப்பகுதியில் ரூபா 605,962,000 பெறுமதியான எழுதுபொருள்கள் மற்றும் நானாவித விடயங்களை கொள்வனவு செய்யும் போது கொள்வனவு நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை என கணக்காய்வு தெரிவுசெய்வையில் வெளிப்பட்டிருந்தது.

(ஆ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வதிவிட செயற்திட்ட முகாமையாளர் அலுவலகம் மற்றும் வளவ விசேட இடத்திலிருந்தான மதிப்பிடப்பட்ட வருடாந்த வாடகை மற்றும் வருமதியான வாடகைகள் முறையே ரூபா 20.6 மில்லியன் மற்றும் ரூபா 67.5 மில்லியனாக இருந்தன. எனினும் உண்மையான பெறுகைகள் முறையே ரூபா 5.46 மில்லியன் மற்றும் ரூபா 4.7 மில்லியனாக இருந்தன. ஆகையால் வருமான பெறுகைகளின் முன்னேற்றம் முறையே 26.6 சதவீதம் மற்றும் 6.9 சதவீதமாக இருந்ததுடன் 08 முக்கிய கடன்பட்டோரிடமிருந்து பெறவேண்டிய நிலுவை மீதி ரூபா 74.13 மில்லியனாக இருந்தது.

(இ) பொல்கொல்லா, கொத்மல, வோவதீன்ன, மபகட, மாதுறு ஓயா மற்றும் விக்டோரியா நீர்த்தேக்கங்களில் ஒதுக்கப்பட்ட பிரதேசங்களில் 655 அத்துமீறிய குடியிருப்பாளர்கள் வசித்திருந்தனர். அவ்வாறான குடியிருப்பாளர்களை வெளியேற்றுவதற்கும் மேலும் வருகை தருபவர்களை தடுப்பதற்கும் அதிகார சபையானது தவறியிருந்தது என வெளிப்பட்டது.

(ஈ) முறைமை ‘‘எல்’’ தொடர்பான ரூபா 220,000 பெறுமதியான இருப்பு குறைவு கணக்கிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) ரூபா 1,317,000 பெறுமதியான வழக்கொழிந்துபோன இருப்புக்களை அகற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) காணிப் பிரிவின் பதிவேடுகளின்படி 5177 காணித் துண்டுகள் வெளித்தரப்பினரால் சட்டரீதியற்ற முறையில் உடமையாக்கப்பட்டது. இந்த காணிகளிற்காக சட்டரீதியான நடவடிக்கைகளின் தாமதங்கள் காரணமாக அதிகாரசபையானது உழைக்கப்பட வேண்டிய வருமானத்தை இழந்திருந்தது.

(எ) 1982 இல் வரையறுக்கப்பட்ட மகாவலி கால்நடை வளர்ப்பு மற்றும் விவசாய தொழில் முயற்சிகள் (தனியார்) கம்பனிகளின் ஒரு மில்லியன் பங்குகளில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 10 மில்லியன் முதலீட்டின் மீதான பங்குலாபமானது அதிகாரசபையினால் பெறப்பட்டிருக்காததுடன் 1989 இல் வரையறுக்கப்பட்ட மகாவலி இணைப்பு மூலதன (தனியார்) கம்பனியில் ரூபா 9.8 மில்லியன் மூதலீடு செய்யப்பட்ட காசு மீது எவ்வித வட்டியும் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஏ) நீராவிய மற்றும் காலன்குற்றியாவிலிலுள்ள இரண்டு காணிகளை வரையறுக்கப்பட்ட மகாவலி கால்நடை வளர்ப்பு மற்றும் விவசாய தொழில் முயற்சிகள் (தனியார்) கம்பனிகளின் பயன்பாட்டிற்காக அதிகாரசபையானது 1982 இல் கையளித்திருந்தது. எவ்வாறாயினினும், இந்த துணைக்கம்பனிகளிடமிருந்து குத்தகை வாடகையை உரிய திகதியில் சேகரிப்பதற்கு அதிகாரசபையால் நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

### 4.3 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

1978 இன் 3 ஆம் இலக்க மகாவலி அதிகார சபை சட்டத்தின் பந்தி 26(ஊ) இலுள்ள ஏற்பாடுகளின்படி, அதிகாரசபையால் பெறப்படுகின்ற அனைத்து மானியங்களும் அதிகாரசபையின் பொது நிதியத்திற்கு செலவு வைக்கப்படவேண்டும். ‘‘மகாவலி விளையாட்டுச் சங்கம்’’ என்ற பெயரில் அதிகாரசபையால் அம்பிலிப்பிட்டிய இலங்கை வங்கி கிளையில் (கணக்கு இலக்கம் 2297822) தனியான வங்கிக்கணக்கு செயற்படுத்தப்பட்ட போதிலும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இக்கணக்கிலுள்ள மீதியானது அதிகாரசபையினுடைய கணக்கிற்கு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை.

### 4.4 ஏனைய நிறுவனங்களுக்கு வீடுவிக்கப்பட்ட சொத்துக்கள்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ - 12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கை 8.3.9 ஆம் பந்திக்கு முரணாக கொத்மலை பயிற்சி நிலையத்தில் ரூபா 26,030,780 பெறுமதியான கட்டடங்கள் நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தது. அதேநேரம், 54 வாகனங்கள் வெளித்தரப்பினருக்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) அதிகாரசபையின் 12 மேல்மாடி கட்டடங்களில் மூன்று மேல்மாடிகளிலும் வேறொரு மேல்மாடியின் ஒரு பகுதியிலும், நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள்

முகாமைத்துவ அமைச்சு மற்றும் நீர்வளத்திட்டமிடல் செயற்திட்டம் வாடகைக்கு அமர்த்தப்பட்ட போதிலும் அவர்களிடமிருந்து வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) அதிகாரசபையின் பெயரில் நிலத்தை சுவீகரிக்காமல் ஜாவத்தையில் 0.99 ஹெக்டெயர் பரப்பளவுள்ள காணியில் ரூபா 73,771,200 தொகையை செலவழித்து ஒரு கட்டிடத் தொகுதியை அதிகாரசபை நிர்மாணித்திருந்தது. இந்தக் கட்டிடத் தொகுதியானது (1600 சதுர அடி) பதினொரு அரசாங்க நிறுவனங்களால் பயன்படுத்தப்பட்டிருந்தபோதிலும் அதிகாரசபையானது 2013 திசெம்பர் 31 வரை இந்த நிறுவனங்களிடமிருந்து வாடகையை சேகரிப்பதற்கு தவறியிருந்தது. மேலும் 2010 திசெம்பரிலிருந்து இந்த கட்டிடங்களை பயன்படுத்திய நீர்ப்பாசன மற்றும் நீர்வழங்கல் முகாமைத்துவ அமைச்சு, பீயோரி ஆலோசனை கம்பனி மற்றும் வடமத்திய மாகாண ஆலோசனை செயற்திட்டம் போன்றவற்றிடமிருந்து 2010 திசெம்பர் தொடக்கம் 2013 திசெம்பர் வரையான காலப்பகுதிக்கான ரூபா 10,190,197 தொகையான மின்சாரம், தண்ணீர் மற்றும் சுகாதார சேவைக்கான கட்டணங்களை அறவிட்டிருக்கவில்லை.

## 4.5 மனிதவள முகாமைத்துவம்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(அ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அதிகாரசபைக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணிகள் 4,614 ஆக இருந்ததுடன் அந்த திகதியில் உள்ளவாறான உண்மையான பதவியணிகள் 4,298 ஆகும். ஆகையால் 2013 திசெம்பர் 31 இல் 438 வெற்றிடங்கள் நிலவியது. மேலும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ஆரம்ப மட்டத்திலுள்ள மிகையான பதவியணிகள் 438 ஆக இருந்தன.

(ஆ) அதிகாரசபையின் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு தேவையான தகைமைகள் மற்றும் அனுபவங்கள் இல்லாமல் 2012 மற்றும் 2013 இல் சிரேஷ்ட மட்டத்தில் நான்கு முகாமையாளர்கள் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர்.

(i) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் அப்பதவிக்கான ஏற்பாடுகள் இல்லாதபோதும் 2011 இல் ஒரு பெண் உத்தியோகத்தர் அப் பதவிக்காக (செயலாளர் அலுவலகம்) வேலைக்கமர்த்தப்பட்டிருந்தார். பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை விளம்பரத்தின்படி இப்பதவிக்கு 15 வருட அனுபவங்கள் தேவையான போதிலும் அப்பெண் உத்தியோகத்தர் அதனை பூர்த்திசெய்திருக்கவில்லை. அதன்பின்னர், அதிகாரசபையின் அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டத்தில் அதே தேவையான தகைமைகள் மற்றும் அனுபவங்களும் வேண்டப்பட்ட போதிலும் பணிப்பாளர் (தலைமை அலுவலக செயற்பாடுகள்)) பதவிக்கு அப்பெண் உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்தார்.

(ii) 2011 இல் தேவையான அனுபவங்கள் இல்லாமல் வேறொரு உத்தியோகத்தர் பணிப்பாளர் (மனித வளங்கள் மற்றும் நிறுவன உதவி) பதவிக்கு வேலைக்கமர்த்தப்பட்டிருந்தார்.

(iii) வேண்டப்பட்ட தகமைகள் மற்றும் அனுபவங்கள் இல்லாமல் ஒப்பந்த அடிப்படையில் பணிப்பாளர் (மகாவலி நிலையம்) பதவியானது நிரப்பப்பட்டிருந்தது.

(iv) பணிப்பாளர் (ஆளணி) பதவிக்கு தேவையான வேண்டப்பட்ட தகைமையாக தரம் I இருந்த போதிலும் இலங்கை நிர்வாக சேவைகள் தரம் III உத்தியோகத்தர் ஒருவர் உரிய அமைச்சிற்கு

செயலாளரால் நியமிக்கப்பட்டிருந்தார். மேலும், இந்த உத்தியோகத்தர் அந்த பதவிக்கு தேவையான தகைமைகள் இல்லாமல் 2014 சனவரி 09 இலிருந்து பிரதம பணிப்பாளர் நாயகம் ( நிர்வாகம் மற்றும் நிதி) நியமிக்கப்பட்டிருந்தார்.

## 05. கணக்களிப்புப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

2012 ஆம் ஆண்டில் 2012 தொடக்கம் 2016 வரையான 05 ஆண்டிற்காக கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. ''மஹிந்த சிந்தனை பத்து ஆண்டுத் திட்டத்தின்'' பிரகாரம் நீர்ப்பாசனப் பிரிவினால் அடைந்துகொள்ளப்பட வேண்டிய இலக்குகள் தொடர்பாக கூட்டிணைந்த திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந்த இலக்குகளை அடைந்துகொள்வதற்குத் தேவையான உபாய வழிகளை இனங்கண்டு அவற்றினை அமுல்ப்படுத்துவதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

(அ) மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் ஒவ்வொரு கருமங்களிற்கும் பொறுப்பான உத்தியோகத்தர்கள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவனரீதியான உதவி மற்றும் மனித வளங்கள் அபிவிருத்தியின் கீழுள்ள செயல்நடவடிக்கைத்திட்டத்தில் உள்ளடக்கிய ரூபா 1,813,000 பெறுமதியான 81 நிகழ்ச்சித்திட்டங்கள் மீளாய்வாண்டின் போது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை என கணக்காய்வு தெரிவுச்செவ்வை வெளிப்படுத்தியிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்கான காணிப் பிரிவின் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், ஒட்டுமொத்தமான செயலாற்றல் 42 சதவீதம் மாத்திரமேயாகும். வழமைக்குமாறான இலக்குகள் தயாரிக்கப்பட்டமை மற்றும் தொடர்பான பிரிவின் வினைத்திறமையீன்மைகள் போன்றன குறைந்த செயலாற்றலுக்கு காரணமாகவிருந்தது என மேலும் அவதானிக்கப்பட்டிருந்தது.

### 5.3 உள்ளகக் கணக்காய்வு

2010 நவம்பர் 30 ஆந் திகதியிலிருந்து பணிப்பாளர் பதவி (உள்ளகக் கணக்காய்வாளர்) வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் 2014 திசெம்பர் 31 வரை அப்பதவிக்கு தகைமையுடைய ஒருவர் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 5.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2003 யூன் 01 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையில் 7.4.1 ஆம் பிரிவின் படி ஒவ்வொரு 03 மாதங்களுக்கு ஒரு முறை குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும், 2013 ஆம் ஆண்டினுள் 02 கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் மாத்திரம் கூட்டப்பட்டிருந்தன.

### 5.5 கொள்வனவுத் திட்டம்

2013 ஆம் ஆண்டிற்காக கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அது போதியளவில் கண்காணிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.6 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாறான செலவினங்களுக்கிடையில் பின்வரும் முக்கிய முரண்கள் அவதானிக்கப்பட்டிருந்தது. ஆகையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுச் சாதனமாக பயன்படுத்தவில்லை என வெளிப்படத்தபட்டிருந்தது. அத்தகைய சில சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செலவினம் | பாதிடப்பட்ட செலவினம் ரூபா | உள்ளபடியான செலவினம் ரூபா | முரண்கள் ரூபா | பாதிடப்பட்ட செலவினத்தின் சதவீதமாக முரண்கள் ரூபா |
|---|---|---|---|---|
| எழுதுகருவிகள் மற்றும் அச்சிடல் | 14,545,000 | 20,583,456 | 6,038,456 | 41.52 |
| வாகன திருத்தங்கள் மற்றும் பராமரித்தல் | 28,401,600 | 87,929,898 | 58,528,298 | 209.6 |
| கட்டடங்கள்மற்றும் உட்கட்டமைப்புக்கள் | 10,335,000 | 14,078,078 | 3,743,078 | 36.22 |
| அலுவலக உபகரணங்கள் | 6,325,000 | 8,231,064 | 1,906,064 | 30.14 |

## 5.7 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

முன்னைய வருட கணக்காய்வு அறிக்கையில் குறித்துக்காட்டப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் 2015 யூன் 30 வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(அ) 2010 மே தொடக்கம் 2011 திசெம்பர் வரை வலயம் எச் இன் வதிவிட செயற்திட்ட முகாமையாளிற்கு வழங்கப்பட்ட வாகனத்திற்கு அப்பால் மேலுமொரு வாகனம் பயன்படுத்தியிருந்தார். பாதுகாப்பு பிரிவால் பேணப்பட்ட நுழைவு அனுமதிச்சீட்டின் பிரகாரம், மேலே குறிப்பிடப்பட்ட வாகனமானது மேலே குறிப்பிடப்பட்ட காலத்தின் போது அலுவலக இடத்திற்கு வந்து சேர்ந்திருக்கவில்லை. இருந்த போதிலும், வதிவிட செயற்திட்ட முகாமையாளரின் கையொப்பத்தை இடுவதன் மூலம் ஒவ்வொரு போக்குவரத்தையும் சான்றுறுதி செய்திருந்தார்.

இந்த வாகனத்தின் சாரதி வாகனத்தின் நாளாந்த ஓட்ட நடவடிக்கைகள் தம்புத்தேகமவிலிருந்து ஆரம்பிக்கப்படுவதாக குறிப்பிட்டிருந்த போதிலும், 2010 பெப்ரவரி முதல் 2011 திசெம்பர் வரை அவர் எந்தவொரு நாளிலும் தம்புத்தேகம அலுவலகத்தின் வருகை மற்றும் வெளிச்செல்லல் பதிவேட்டில் கையொப்பமிட்டிருக்கவில்லை.

இந்த வாகனத்தை அலுவலகத்தில் பயன்படுத்தாத காலத்தினுள் திருத்தல் மற்றும் 04 டயர்களை போடுவதற்காக ரூபா 201,385 செலவினம் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது அது தொடர்பான ஆரம்ப விசாரணையொன்று தொடங்கப்பட்டுள்ளதாக பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2011 செப்தெம்பர் 16 ஆந் திகதி முதல் ‘‘எச்’’ வலயத்தின் வதிவிட செயற்திட்ட அலுவலகத்திற்கு மேலுமொரு வதிவிட செயற்திட்ட முகாமையாளர் நீதிமன்றக் கட்டளையின் படி இணைக்கப்பட்டிருந்தார். இந்த இரண்டு உத்தியோகத்தர்களால் அங்கீகாரமில்லாமல் 2011 ஆம் ஆண்டில் ரூபா 682,298 பெறுமதியான எரிபொருளை மிகையாக பெற்றிருந்தனர்.

(இ) இலங்கை மின்சார சபையின் மொத்த நீர்மின் உற்பத்தியில் ஏறத்தாழ 50 சதவீதம் மகாவலி நீர்த்தேக்கங்களை இணைத்து நிர்மாணிக்கப்பட்டுள்ள நீர்மின் உற்பத்தி நிலையங்களால் உற்பத்தி செய்யப்படுவதுடன் பொல்கொல்ல, விக்டோரியா மற்றும் கொத்மலை போன்ற நீர்த்தேக்கங்களின் அணைக்கட்டுக்களின் மீதுள்ள மின்சார

விளக்குகளிற்காக அதிகாரசபையால 2013 ஆம் ஆண்டில் இலங்கை மின்சார சபைக்கு அவர்களுடைய மின்சாரக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், விக்டோரியா அணைக்கட்டினை நிர்மாணிப்பின் அதன் ஆரம்ப கட்டத்தில் அணைக்கட்டின் மின்சாரத் தேவையை எதிர்கொள்வதற்காக சிறிய மின் உற்பத்தி நிலையமொன்றை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அவசியமான உபகரணங்களையும் முதலாவது நிர்மாணக் கம்பனி வழங்கியிருந்தது. இருந்த போதிலும் பின்னர் அந்த நிர்மாணம் கைவிடப்பட்டிருந்ததுடன், அந்த உபகரணங்கள் பயன்படுத்தப்படாது பாதுகாப்பின்றி பல்வேறு இடங்களில் வைக்கப்பட்டிருந்தது. நீர்தேக்கங்களை பராமரிப்பதற்கும் மின்சார சபை பயன்படுத்தும் நீரிற்காகவும் கட்டணம் செலுத்தப்படாமையால் இப் பிரதான அணைக்கட்டுக்களின் மின்சாரத் தேவையினை இலவசமாகப் பெற்றுக்கொள்வதற்கு அதிகாரசபை கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் பணிப்பாளரது நாயகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) காணிகளை குத்தகைக்கு வழங்குதல்
(ஆ) சொத்து முகாமைத்துவம்
(இ) பண்ணை நிர்வாகம்
(ஈ) இருப்பு கட்டுப்பாடு
(உ) வாடகை சேகரிப்பு
(ஊ) வாகன மீதான கட்டுப்பாடு
(எ) முற்பணங்களை கொடுப்பனவு
(ஏ) செயற்திட்ங்களை அமுல்படுத்தல்